தவத்திரு விபுலானந்த அடிகளாரின்

# 100ற்றாண்டுப் பாமலர்

கவிஞர் ஞானமணியம்



வெளியீடு:

பண்டைத்தமிழ்க் கிராமிய அரங்கம்

லண்டன்-பிரித்தானியா

22-12-92




மட்டக்களப்பு விபுலானந்த அடிகள் இசை நடனக் கல்லூரி




மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் விபுலானந்த மண்டபம்.

# தவத்திரு
# விபுலானந்த அடிகளாரின்
# 100ற்றாண்டுப் பாமலர்

ஆக்கம்:

கவிஞர் ஞானமணியம்

வெளியீடு:

பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம்

லண்டன் -1992- பிரித்தானியா

தவத்திரு விபுலானந்த அடிகளாரின்
**100ற்றாண்டுப்பாமலர்**

| | |
|---|---|
| **ஆக்கம்** | : கவிஞர் ஞானமணியம் |
| **முதலாவது பதிப்பு** | : 22-12-92 |
| **மொழி** | : தமிழ் |
| **பக்கங்கள்** | : 24 |
| **பிரதிகள்** | : 2000 |
| **பதிப்புரிமை** | : நூலாசிரியருக்கு |
| **வெளியீடு** | : பண்டைத்தமிழ்க் கிராமிய அரங்கம் லண்டன் |
| **அச்சகம்** | : புனித செபத்தியார் அச்சகம் 65 லேடி மனிங் டிறைவ் மட்டக்களப்பு, இலங்கை. |
| **லேசர் அச்சு** | : சித்திரா கிராபிக் ஆர்ட்ஸ் 55வது ஒழுங்கை, கொழும்பு- 6. |
| **அட்டை** | : ஓவியர் எஸ். வேலாயுதம்பிள்ளை |

**Thavaththiru Vipulanantha Adikalar**
**Nootandu Paamalar**

| | |
|---|---|
| **Author** | : Kavingnar Gnanamaniyam |
| **First Edition** | : 22-12-92 |
| **Language** | : Tamil |
| **Pages** | : 24 |
| **Copies** | : 2000 |
| **Copyright** | : (c) Author |
| **Publishers** | : Ancient Tamil Folk Theatre London - United Kingdom |
| **Printers** | : St. Sebastian Printers 65, Lady Manning Drive, Batticaloa, Sri Lanka |
| **Laser Typeset** | : Chitra Graphics Arts 55th Lane. Colombo 6. |
| **Cover** | : Artist S. Velayuthampillai |




மட்டக்களப்பு கல்லடி-உப்போடை
இராமகிருஷ்ண மிஷன்

**சுவாமி ஜீவனானந்த அவர்களின்**

# ஆசியுரை

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனும் வரகவி பாரதியின் மணிமொழிக்கேற்ப, தமிழின் சுவையையும், மற்றும் தமிழ்க்கலை கலாச்சாரம், பாரம்பரியப் பண்பாடு, ஆத்மீக நெறி என்பவற்றின் மேன்மையையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், இலண்டன் மாநகரில் பணியாற்றும் பண்டைத்தமிழ்க் கிராமிய அரங்கம் எனும் நிறுவனத்தின் செயற்பாடுகளை அறியும் போது மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. மட்டக்களப்பில் 1958 ம் ஆண்டு முதல் மேற்படி துறைகளில் பிரபல்யம் பெற்றிருந்த கவிஞர் ஞானமணியம் பழுதற்ற பணியாற்றிக் கொண்டிருக்கிறார். தற்போது முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் ஞாபகார்த்தமாக நூற்றாண்டு பாமலர் ஒன்றினைப் பாருக்களிக்கிறார். தமிழ் கூறும் நல்லுலகமெலாம் அடிகளாரின் பல்வேறு துறைசார்ந்த பணிகளைப் பற்றிப் பேசிப் பாடிப் பரவிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், கவிஞர் ஞானமணியம் அவர்கள் இத்தகைய ஒரு பாமலரைச் செகசிற்பியாரும் ஷெல்லியும் பிறந்த ஆங்கில மண்ணிலே வெளியிடுவது சிறந்ததொரு இலக்கியப் பரிவர்த்தனை என்பது மட்டுமன்றி, அடிகளாரின் குன்றனைய பணிகளைக் குன்றிலிட்ட தீபமாக எடுத்துக்காட்டும் சீரிய பணியுமாகும்.

அடிகளாரின் கலாசிருஷ்டிகள் அமரத்துவம் வாய்ந்தவை. குறுகிய காலதேச வர்த்தமான எல்லைகளுக்கு உட்படாதவராய், உயரிய விழுமியங்களை உள்ளடக்கிய உண்மை-அழகு-நன்மை தழுவிய பொருள்கள் எங்கிருந்தாலும் அவற்றையெல்லாம் தொட்டுக்காட்டும் வகையிலும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் எனும் பாரதியின் கருத்துக்கேற்பவும் உலகின் சிந்தனைத்தோட்டங்களிற் பூத்துப் பரிமளித்த நன்மலர்களை நுகர்ந்து, அவற்றை நமது வருங்காலச் சந்ததிக்காக உரிய கலைவடிவங்களாக ஆக்கிவைத்துச் சென்றுள்ள கலைஞானி அவர்.

எனவே, அவரின் பெயரில் பைந்தமிழ்ப் பாமலர் ஒன்றினை வெளியிடும் முயற்சி நல்ல உள்ளம் படைத்த இலக்கிய ஆர்வலர் அனைவரதும் பாராட்டுக்குரியதொன்றாகும். கவிஞர் ஞானமணியம் அவர்களின் இந்த நந்முயற்சியைப் போற்றுகின்றோம். வருங்காலத்திலும் இத்தகைய பாமலர் பலவற்றை யாத்துத் தமிழன்னையின் பாதகமலங்களிற் சூட்டிப் பரவசமடைவதற்கு வேண்டிய சக்தியை அவருக்கு நல்கவேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன். கவிஞரின் நன்முயற்சிகள் வெல்கவென வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,
சுவாமி ஜீவனானந்த.

விபுலானந்த அடிகள் இசை நடனக் கல்லூரி அதிபர்
***திருமதி.வி.தட்சணாமூர்த்தி அவர்களின்***
***(சங்கீத வித்துவான்)***



## ஆசியுரை

கலைச் செல்வங்கள் நிறைந்த ஈழத்து மட்டு மாநகரின் கண்ணே, காரேறும் மூதூரிலே கலைச்செல்வமதைக் கொழிக்க வைக்க அவதரித்த அவதார புருஷர் சுவாமி விபுலானந்தர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஈழத் திரு நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் கொண்டாடப்படுகின்றது என்பதை லண்டன் பண்டைத்தமிழ் கிராமிய அரங்கம் தவத்திரு விபுலானந்த அடிகளாரின் 100ற்றாண்டுப் பாமலர் எனும் நூலை வெளியிடுவதன் மூலம் எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

பாமணம் வீசி, தீந்தமிழில் தேன்சொட்ட விபுலானந்தரின் பெருமை தனை பாக்களிலே வடித்து விட்டார் சீமையிலே கவிஞர் ஞானமணியம். சீர்பூத்த சீமையிலே, கலைத்தாயின் மகனாம் முத்தமிழ் வேந்தனின், புகழ் பரவ வேண்டுமென அவாக் கொண்டு கவியழகும், சீர்நடையும் கொண்டமைந்த கவிகளை படைத்துள்ளார்.

இலங்கை நாட்டில் மட்டக்களப்பிலே பழுகாமம் என்ற ஊரிலே பிறந்து, குருக்கள்மடத்தில் புகுந்து, இசை, நாடகம் மூலம், தமிழ் பண்பாட்டையும், கலாசாரத்தையும் தம் நாட்டில் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர். தற்போது லண்டன் மாநகரை வசிப்பிடமாகக் கொண்டு, 1985ல் ஆரம்பித்த பண்டைத் தமிழ் கிராமிய அரங்கில் தமிழ்ப் பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ் நூலை யாத்தளித்த விபுலானந்த அடிகளாரின் விழாவினைச் சிறப்பிக்க எழுதப்பட்ட இப்பாமலர் அனைவரின் மனங்களிலும் பாமணம் வீச வேண்டும் என்பது அவாவாகும்.

கல்லடி, மட்டக்களப்பு.
10-12-1992.

**திருமதி. வி. தட்சணாமூர்த்தி**
**அதிபர்.**



# புகழ் பாடுவதிற் பெருமை

வண்ணத் தமிழ் அண்ணலாம் எங்கள் மயில்வாகனன் கிழக்கு மண்ணிலே அவதரித்தார்! வளரும் நிலையினைத் தமது இளமையிலேயே பிரதிபலித்தார்! தாய்மொழியாம் தமிழை முதலிற் பயின்று பின்னர் ஆங்கிலமும், வடமொழியும் பயின்றுர். அத்தோடு அரபு, சிங்களம், வங்காளம், இலத்தின், கிரேக்கம், பாளி போன்ற உள்நாட்டு வெளிநாட்டுப் பாஷைகளையும் கற்றுணர்ந்தார்.

கண்ணியம் ஒழுகினார், சீவகாருண்ணியம் தழுவினார்! சிவநெறிப் பெருமைகளையும், சீலம் மிகு தத்துவங்களையும், அறிந்து, தெளிந்து தவநிலைக் கோலம் தாங்கினார்!.

பண்ணிசை ஞானமும் பயின்று தேறியதுடன், பக்தியும், வித்துவமும் நிறைந்த தத்துவப் பாக்களை யாத்துப் பல்லோரும் சுவைக்கப் பகிர்ந்தார்! பண்டையப் பைந்தமிழ் இசை ஒலிக்கும் கண் கவர் யாழினைக் கையில் ஏந்தினார்! அன்றும்; இன்றும் ஒன்றிணையும் வகையிலே யாழின் வரலாற்றை ஆராய்ந்து தேறினார்! ஏழிசை கூறும் யாழிசை ஏடாக யாழ் நூலைப் படைத்தார்! அடிகளாரின் முத்தமிழ் ஆற்றலை, அன்னாரின் எழுத்துத் திறமையினால் உருவாகிய மதங்க சூளாமணி, நடராஜ வடிவம், நாவலர் நான்மணி மாலை போன்ற நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன!.

அறிவிலும், அறநெறியிலும், சிவஞானத்திலும், சிந்தயைக் கவரும் இசை ஞானத்திலும், ஆத்மிகத் துறவு நிலையிலும், அன்பு மார்க்கத்திலும், அருள், கருணை, பொறுமை அனைத்திலும் சிறந்து விளங்கியதால் ''விபுலானந்த அடிகளார்'' என்னும் புகழ்ப் பெயர் பூண்டு விளங்கினார்! பெற்றவர், உற்றவர் இல்லாத பிள்ளைகளையும், நாதியற்ற பிள்ளைகளையும் பற்று மிகுதியுடன் பராமரித்து, ஆதரித்துப் பாதுகாப்பதற்கு ஆச்சிரமங்களும்-அநாதை மடங்களும் ஒன்றிணைந்தவாறு அமைத்தார்! அநாதைகள் என்று ஒரு சமுதாயமே இருக்கக் கூடாது எனப் பரிந்து, சமரச சன்மார்க்கச் சாந்தி நிலையங்களைத் தாபித்தார். ஆங்காங்கே தமிழும், சைவமும், சமரசமும் தழைத்து வளரச் செய்தார்! கல்வியென்னும் ஒரே செல்வத்தின் மூலம் ஏனைய தூய செல்வங்கள் அனைத்தையும் அடைவதற்கு எல்லோருக்கும் வழிகாட்டினார்.

அமரதீபம் ஆகிப் பிரகாசிக்கும் நமது உதய நாட்டு அடிகளாரின் புகழ் நாமம் போற்றப் படுகின்ற ஆங்கீரசமாம் இந்த நூற்ருண்டிலே; அன்னாரை நினைவு கூர்ந்து ''**நூற்ருண்டுப் பாமலர்**'' என்னும் பாடல் நூலை வெளியிடுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்ருேம்!

பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம்
ANCIENT TAMIL FORK THEATRE
LONDON-UNITED KINGDON

Adviser:Mr.N.Sivasambu    President:Mr.G.Subramaniyam,
vice President: Mrs.Subathiradey Thevaretnam
Secretary: Mr.T.Nithiyanandam    Assistant Secretary:Mr.S.Thanjan,
Treasurer:Mr.T.Rajarathinam
Auditor:Mr.S.V.M.Achchuthan-Accountant.

## நாம் இருவர் வாழ்த்துகின்றோம்

தவத்திரு விபுலானந்த அடிகளாரின் 100ற்றாண்டுப் பாமலர் வெளியீட்டின் நிருவாக அமைப்பாளர்களாக எங்கள் இருவரையும் பேரன்புடன் நியமித்து, இந்தப் புனிதமான திருப்பணியாம் சைவத் தமிழ்த்தொண்டை ஆற்றுதற்கு எமக்கு அரியதோர் சந்தர்ப்பத்தை அளித்த லண்டன் பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம் மென்மேலும் இவ்வாறான பணிகளைத் தொடர வேண்டுமென்று மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

திரு.இ.கந்தசாமி ஜே.பி
(சட்டத்தரணி)
திரு.ஞா.சாமித்தம்பி
(பிரதேச மருத்தாளர்)
பாமலர் வெளியீட்டு
நிருவாக அமைப்பாளர்கள்

குருக்கள்மடம்,
10-12-1992.



## பொருளடக்கம்


01. இறை வணக்கம் ........ 08
02. விடிவெள்ளி-விபுலானந்தன் ........ 09
03. இமயம் சேர்ந்த காக்கை ........ 10
04. வாலாயம் ஆகிடுவார் ........ 11
05. என்ன சொல்லிப் பாடுதாம் ........ 12
06. அடிகளாரின் அடியார் ........ 13
07. யாழ் - நூல் ........ 15
08. ஆச்சிரமம் ........ 16
09. ஏழையின் நன்றி மனம் ........ 17
10. யாழின் நரம்பொலி ........ 18
11. சிறுவரும் அறிவர் ........ 19
12. அடிகளாரின் படிகளானோர் ........ 21
13. மணிமண்டபம் ........ 22
14. நூற்றாண்டு வாழ்த்து ........ 23

# இறை வணக்கம்

வித்தகன் விபுலானந்தன்
அத்துணை அருள் படைத்தாய்!

முன்னின்று மயில் வாகனனை
மன்னும் கணேஷா;நேசா!

யாழ் முனிவன் நாவில் நின்றே
நாமகளே வாணித் தாயே!

திருவளமாய்க் கல்விப் பதிகள்
பெருவளமாய்த் தந்தாய் செல்வி!

உள்ளமதில் உறுதி யூட்டி
வள்ளலுக்கு வரங்கொடுத்தாய்!

சிவநெறியால் நின்றன் நாமம்
தவமுனிதொண் டாற்றும் பாக்கியம்!

அயலவரும் வெளிநாட்டாரும்
வயிரவ பிரானே காவல்!

உண்ணு முணவா லருந்தும்
பண்ணழகர் தம்மைக் காத்தாய்!

அவதாரம் தசமானாயே
தவயோகி விபுலானந்தன்!

ஏறுநடை விவேகானந்தன்
ஆறுபடை முருகா! கந்தா!

எல்லாமே வல்ல தெய்வம்
ஏற்றி டநம் அடிகள் நாமம்!

விடிவெள்ளி யாய்மலர்ந்தான்!
பிரம்மனே முதல் வணக்கம்!

முறையோடு முன்னேற்றினையே
வாழியநின் புகழ் வணக்கம்!

நடமாடி வேதம் சொன்னாய்
நாயகியே! தாள் வணக்கம்!

செய்யுமருள் அடிகளார்க்குப்
அலைமகளே! ஆள் வணக்கம்!

உதிரமது தமிழாய் ஓட்டி
மலைமகளே! குலவணக்கம்!

செகமெங்கும் நீடத்தானே
தந்தசிவ நாதா வணக்கம்!

அன்புகொளப் பண்பாளருடன்
வழங்கினாய் பதம் வணக்கம்!

நீரதனால் வினை சூழாமல்
படநாகப் பரம், வணக்கம்!

அழகேசா, வண்ணா, கண்ணா!
தனையாண்டாய் கழல் வணக்கம்!

இனியவழி முனிவன் இவனை
ஆண்டதுநின் அருள் வணக்கம்!

எல்லாமே எல்லா உலகும்
எமை ஆள்கவே வணக்கம்!



# விடிவெள்ளி-விபுலானந்தன்

விளக்கொளிக் கதிரோவெண் பரிதிப் பகலோ - அன்றி
வேதாந்த மறையின் மயமோ! தனி வரமோ!
கிழக்கொளித் தாரகையோதண் மதியோ தானோ! - அன்றிக்
கிடைக்காத நறுமா மலரோ! நவ மணியோ!

தமிழுக்கோ சைவத்துக்கோ தாரணிக்கோ! - அன்றிச்
சங்கீதத் தேவகானம் தருவதற்கோ!
அமைதிக்கோ ஆத்மிகந்தான் ஆவதற்கோ! - அன்றி
அனைவோரும் தருமநீதி அறிவதற்கோ!

ஏழைகளும் கல்விச் செல்வம் பெறுவதற்கோ! - அன்றிப்
பாமரரும் பண்டிதராய் மலர்வதற்கோ!
அன்னையிலாத் தந்தையிலா அநாதைகட்கோ! - அன்றி
ஆதரவே இல்லாத மானிடர்க்கோ!

மீன்மகளிர் பாடுமிசை மீட்பதற்கோ! - அன்றி
மெட்டிசைத்து யாழினிலே பாடுதற்கோ!
தேன்மதுரப் பண்ணிராகம் தெரிவதற்கோ! - அன்றித்
தித்திக்கும் திவ்வியநாதம் ஒலிப்பபதற்கோ!

பண்டிருந்த யாழினை நாம் பார்ப்பதற்கோ! - அன்றிப்
பாணர்களாய் எமையுலகிற் படைப்பதற்கோ!
கண்டவர்கள் கிழக்குவளம் வியப்பதற்கோ! - அன்றிக்
காணாதார் கண்டுமனம் களிப்பதற்கோ!

வண்டமிழர் வரவேற்று மகிழ்வதற்கோ! - அன்றி
வையகத்தில் நாமென்றும் நினைப்பதற்கோ!
கொண்டுமது சிலைநாட்டி ஏற்றுதற்கோ! - அன்றிக்
குலமொன்று கூடிநின்று போற்றுதற்கோ!

மண்டலத்தி னோரும் சைவ மரபினோரும் - இன்று
மங்கள விழாவெடுத்து வாழ்த்துதற்கோ!
விண்டலத்தே வாழுகின்ற விபுலானந்தா! - அன்று
விடிவெள்ளி போற்கிழக்கில் வீற்றிருந்தாய்!

# இமயம் சேர்ந்த காக்கை

காக்கைக் கூண்டில் வளர்ந்த குயில்
கானமிசைத்துக் கூவிடும்!-கானமிசைத்துக் கூவிடும்!
காக்கை பாடும் பாட்டினாலும்
காதில் இன்பங் கூடுமோ?-காதில் இன்பங் கூடுமோ? - கா

ஆயினும்மா இமயம் சேர்ந்து
அடைந்த வொரு காகம்-அடைந்த வொரு காகம்,
தாயினம்பே ரின்ப மடையத்
தந்த தினிய கீதம்!-தந்த தினிய கீதம்! - கா

இமயம் சேர்ந்த காக்கை பாரில்
இணை யில்லாத காக்கை-இணையி ல்லாத காக்கை,
சமய மெங்கள் சைவ நீதி
தன்னை வளர்த்த காக்கை-தன்னை வளர்த்த காக்கை - கா

யாழின் இசையும் யாழின் நூலும்
யாத்த ஞானக் காக்கை!-யாத்த ஞானக் காக்கை!
ஊழி வரைக்கும் உலகில் நிலைக்கும்
உயர்வு தந்த காக்கை!-உயர்வு தந்த காக்கை! - கா

தானடைந்த தவத்தை நமக்கும்
தந்த தருமக் காக்கை!-தந்த தருமக் காக்கை!
தானடைந்த உணவை இனத்தைச்
சார்ந்து உண்ணும் காக்கை-சார்ந்து உண்ணும் காக்கை ! - கா

கூவுங் குயிலைப் போலும் இனிமை
கூட்டிப் பாடும் காக்கை-கூட்டிப் பாடும் காக்கை
யாவுந் தமிழின் மாண்பு காத்த
நல்ல காவற் காக்கை!-நல்ல காவற் காக்கை! - கா

காக் கை நீட்டி நம்மை அணைத்துக்
காத்து நின்ற காக்கை!-காத்து நின்ற காக்கை!
யாக்கை நீங்கி நாளும் வாழும்
நம் விபுலானந்தன்!-நம் விபுலானந்தன்! - கா



# வாலாயம் ஆகிடுவார்

வெண்ணிலா வானத்திலே
பவனி வரும் நேரத்திலே
வண்ணமா மருதவளம்
மருவுங் கரை வாவியிலே
பண்ணிசை மீன்மகளிர்
பாடுகின்ற வேளையிலே
அண்ணல் விபுலானந்தன்
ஆங்கிருப்பார் ஓடத்திலே! - வெண்

காடுவெட்டிக் கழனி செய்து
கதிரவனின் உதயத்திலே
மாடுகட்டி ஏர்பிடித்து
வயலை உழும் பொழுதினிலே
பாடுபடும் பாட்டாளி
பாட்டிசைக்கும் காலையிலே
நாடுமருள் நாதமுனி
நடந்து நிற்பார் வரம்பினிலே - வெண்

கோலாட்டம் கும்மி நாட்டுக்
கூத்துப் பாட்டுக் கேட்பதிலும்
தாலாட்டும் தாய்பாடும்
தாலாட்டுக் கேட்பதிலும்
வேலாட்ட விழிமாதர்
மென்குரவை கேட்பதிலும்
வாலாயம் ஆகிடுவார்
வாலிபத்தில் வாகனனார்! - வெண்

கிழக்கு மானிலத்தின்
கிராமியப் பண்பாடும்
வழக்கம் தவறுமல்
மன்னுமியல் வரலாறும்
அளக்கும் ஆனந்தனார்
ஆதியருங் கலையாவும்
விளக்கும் பணியாலும்
வித்தகனாம், தாத்துவனாம்! - வெண்

# என்ன சொல்லிப் பாடுதாம்!

என்ன சொல்லிப் பாடுதாம்!
ஏரி இசை மீனதாம்!
கன்னல் மொழிக் கிளிகளே!
கானம் பாடும் குயில்களே! - என்ன

மருதம் வளரும் நாட்டிலே!
மட்டு நகரின் ஏட்டிலே
சரிதை சொல்லும் நாயகன்!
தன்னைச் சொல்லிப் பாடுதாம்! - என்ன

தவசி அழகுத் தான்மிகன்
சைவத் தமிழின் காவலன்
தருண மழையின் பாங்கினன்
தயவைச் சொல்லிப் பாடுதாம்! - என்ன

ஞானி எங்கள் வேதியன்
யாழிற் பாடும் பாவலன்
மானி அமரன் மாமுனி
மகிமை சொல்லிப் பாடுதாம்! - என்ன

உதய மண்ணில் ஒளியனாய்
உருவெடுத்த விபுலனாம்
இதயம் தன்னில் வாழ்கிறான்
என்று சொல்லிப் பாடுதாம்! - என்ன

பன்னூற் ருண்டு அடிகளார்
பாயிரங்கள் பாடுமாம்
இன்னூற் ருண்டில் இணையுமாம்
என்று சொல்லிப் பாடுதாம்! - என்ன

வண்ண வண்ணக் கிளிளே!
வசந்த காலக் குயில்களே!
எண்ணி எண்ணி களிக்கிறோம்!
இருவருக்கும் நன்றியே! - வண்ண



# அடிகளாரின் அடியார்

(பகுதி-1)

திரு ராமக் கிருஷ்ணர் திருவடிதான்
சேவித்தவன் விவே கானந்தன்
திரு ஞானத் துறவி அவனடிதான்
சேர்ந்தவன் ஞானி சிவானந்தன்

வண்ண மலரடித் தவசியவன்
வழியினை மருவி நின்றதனால்
எண்ணிய துறவும் எய்தவனே
எங்களருள் விபு லானந்தன்!

திருமறை யோகன் சீலமகான்
செந்தமி ழன்பன் சீர் விபுலன்
கருணையும் மாண்பும் கடைப்பிடித்தான்
களிப்புடன் நடரா ஜானந்தன்!

அருள்மயத் தண்ணல் அவன்பணிதான்
ஆற்றுபவன் ஜீவானந்தன்
இருள்மயத் துயரில் இறைவனையே
ஏற்றுகிருன் நம்மைத் தேற்றுகிருன்!

நம்பி அடிகளார் நடந்த வழி
நாடி மகிழ்ந்தார் சீரடியார்!
அம்பலத் தரசன் அருளடிதான்
அஞ்சலி செய்தார்,வரமெய்தாய்!

வழிவழியாய் நம் மரபினர்கள்
மருவிட வேண்டும் குருகுலமே
மொழியொடு மறையும் மிகவளரும்
முறையது வேண்டும் பலயுகமே!

# அடிகளாரின் அடியார்
(பகுதி-2)

**பல்லவி**

பொன்னடியார் நம் புகழடியார் தம்
போதனை கொண்டார் வழிகண்டார்
பூமியி லாயிரம் அன்பினராம் - பொன்

**அநுபல்லவி**

அன்னவ ரணியில் முன்னவ னானான்
அமரன் புலவர் மணியன்றே!
ஆற்றியவன் தமிழ்ப் பணியன்றே! - பொன்

**சரணங்கள்**

காவியப் புலமும் கலைகளின் வளமும்
கவினுறு நாட்டின் தேசியமும்
காத்திடும் இறைவன் அருள்மயமும்
வாவியின் ஓரம் மருவிடும் அழகும்
மன்னிடும் முல்லை வயலணியும்
வாழ்த்திடும் பாட்டுப் புலவனிவன்! - பொன்

மாவளம் மண்டூர் வேலவன் ஊரில்
வந்து பிறந்து வளர்ந்தவனாம்!
வாழ்வி லுயர்ந்து சிறந்தவனாம்!
பாவளம் தந்து குருக்கள்மடத்திற்
பாங்குறும் தொண்டு புரிந்தவனாம்!
பாவலன் எங்கள் புகழ் மணியாம்! - பொன்

பண்ணெழில் வெண்பாப் பாடுவதில் அந்தப்
பாவரசன் புகழேந்தி யிவன்!
பார்த்திபன் சாரதி தாசனிவன்!
கண்ணனின் கீதை தன்னரும் பாட்டால்
காசினி ஓதும் மறைதந்தான்!
கலையாழ் முனிவன் வழி நின்றுன்! - பொன்



# யாழ்-நூல்

மட்டுநகர் தெற்கி லொரு
மருதவளப் பூமியாம்!
மருதவளப் பூமியாம்!
வட்டமிடும் பச்சைக் கிளி
வந்துலாவுங் காணியாம்!
வந்துலாவுங் காணியாம்! .... மட்

காணி சூழும் காரை தீபம்
கவினுறுங் கிராமமாம்!
கவினுறுங் கிராமமாம்!
வாணிதாசன யோக சீலன்
மயில்வாகனன் ஊரதாம்!
மயில்வாகனன் ஊரதாம் ! .... மட்

ஊரில் நாட்டில் உலகில் எங்கும்
உலவிச் சீலம் ஓங்கினான்
உலவிச் சீலம் ஓங்கினான்
பாரிலோதும் வேத ஞானம்
பயின்றுமேதை ஆகினான்
பயின்றுமேதை ஆகினான் .... மட்

அறமாகிய தவ யோகம்
அருள் மார்க்கம் பேணினான்
அருள் மார்க்கம் பேணினான்
துறமாகிய விபுலானந்தச்
சுடர் நாமம் சூடினான்
சுடர் நாமம் சூடினான் .... மட்

வித்தகனாம் விபுலானந்தன்
மேவும் இசை நாடினான்
மேவும் இசை நாடினான்
உத்தமனாய் யாழ் நூலை
ஓதிப் பயனைத் தேடினான்
ஓதிப் பயனைத் தேடினான் .... மட்

# ஆச்சிரமம்

**பல்லவி**

அன்னை தந்தை இல்லை யெனில்
ஆண்டவன் பிள்ளை - உன்னை
ஆச்சிரமம் தன்னில் ஏற்று
அணைத்திடுவார் தம்பி! - அன்னை

**அநுபல்லவி**

உன்னைமனம் கோணிடாமல்
உள்ளம் இரங்கி - வளர்
தென்னையிளங் கன்றினைப் போற்
தேற்றிடுவார் தம்பி! - அன்னை

**சரணங்கள்**

கல்வி தந்து வாழ்வு தந்து
கலைகளுமே தருவார் - மெய்ச்
செல்வ மெல்லாம் சேரும்வழி
தெரியும் துணை புரிவார்!
நல்வினைகள் செய்யும் சைவ
ஞானமார்க்கம் நம்பி - நீ
நல்லவனாய் வல்லவனாய்
நன்றுயர்வாய் தம்பி! - அன்னை

உன்னைப் போலும் பிள்ளைகளை
ஓராயிரம் பேரை - இல்லம்
உண்டுபண்ணி ஆதரிக்கும்
ஒப்பில்லாத தொண்டாய்!
முன்னை அன்று பள்ளியோடு
ஆச்சிரமம் ஒன்ருய் - நம்
முனிவன் விபு லானந்தனார்
முயன்று வைத்தார் தம்பி! - அன்னை



# ஏழையின் நன்றி மனம்

ஞானி விபுலானந்தர் - கிழக்கினை
நாடிப் பிறந்ததனால்
வானி லமரர்களும் - நம்மையின்று
வாழ்த்தி மகிழ்ந்தாரடி! - ஞானி

சைவம் வளர்ந்ததடி - தமிழ்மொழி
தானும் வளர்ந்ததடி!
தெய்வத் திருப்பணியும் - சங்கீதமும்
சேர்ந்து வளர்ந்ததடி! - ஞானி

இராமக் கிருஷ்ண சங்கம் - பள்ளிக்கூடம்
எங்கும் அமைந்ததடி!
கிராமப் புறத்திலுமே - கல்விநலம்
கிடைக்க நேர்த்ததடி! - ஞானி

ஏழைகள் எங்களுக்கும் - சமரசம்
என்னும் கருணையினால்
வாழ்வு மலர்ந்ததடி - குருகுல
வாசம் தொடர்ந்ததடி! - ஞானி

நாட்டில் விவேகானந்தர் - சிவானந்தர்
நாமம் விளங்குதடி!
ஏட்டிலும் பாட்டிலுமே - நம் ஏந்தலை
இன்று புகழ்ந்தோமடி! - ஞானி

# யாழின் நரம்பொலி

**பல்லவி**

யாழிசை கேட்குதம்மா - செந்தமிழே
நரம்பொலி கேட்குதம்மா! - யாழ்

**சரணம்**

காலையில் மாலையில், கல்லடி மாடத்தில்
ஏழையும் பேரின்பம் எய்திடும் பீடத்தில் - யாழ்

அன்பின் நிலையமாம் ஆச்சிரமம் தன்னில்
நம்பும் இறைவனை நாடுத் தலம் தன்னில் - யாழ்

புண்ணிய போதனை போதிக்கும் சாலையில்
கண்ணியம் காருண்ணியம் காத்திடுங் கூடத்தில் - யாழ்

மீன்மகள் பாடிடும் மெல்லிசைக் கீதத்தில்
தேன்மழை சிந்திடும் திவ்விய நாதத்தில் - யாழ்

அம்மயில் வாகனன் ஆனந்தப் பாவலன்
நம்விபு லானந்தன் நாட்டிய கோட்டத்தில் - யாழ்



# சிறுவரும் அறிவர்

(அங்கம்-1)

விபுலானந்தர் புகழ் பாப்பா - நீ
வெள்ளை மனதோடு கேட்பாய்! - விபு

''ஓடி விளையாடு பாப்பா'' - என்று
பாடிய பாரதி பாட்டால்
''கோடி நலமுண்டு பாப்பா'' - என்று
கூறிய மாமுனி பாப்பா! - விபு

பாடும் இசைமீன்கள் பாடும் - நல்ல
பாட்டொலி ஆனந்த கீதம்
நாடும் உலகோரும் நாடும் - நிலை
நாட்டிய பாவலன் பாப்பா! - விபு

''ஓம் நமசிவாய'' பாப்பா! - எங்கள்
உள்ளத்தில் ஊன்றிடப் பாப்பா!
நாம் மறைஓதிடப் பாப்பா - வழி
நடத்திய நாயகன் பாப்பா! - விபு

இசைக்கொரு கல்லூரி பாப்பா! - இங்கு
எழுந்தது கிழக்கினில் பாப்பா!
இசைக்கலை ஞானியர் பாப்பா - அன்று
ஈட்டிய தவப்பயன் பாப்பா! - விபு

சிறுதுளி சேர்வது வெள்ளம் - கொடை
சேகரிப்போம் அதன் வண்ணம்
வறியவர் கல்வியும் வளரும் - என்று
வாழ்த்திய வள்ளலடி பாப்பா! - விபு

தமிழொடு சைவமும் பாப்பா! - இந்து
சமுத்திர தீபத்தில் பாப்பா!
அமிழ்தையும் தேனையும் போலே - வைத்து
ஆண்டவர் அடிகளார் பாப்பா! - விபு

# சிறுவரும் அறிவர்

(அங்கம்-2)

**பல்லவி**

உள்ளக் கமலமடி ஓதும் இறைவனுக்கு
உகந்த நறுமலராம் - என் தங்கையே
உகந்த நறுமலராம்!

**அநுபல்லவி**

தெள்ளத் தெளிந்த திரு ஞானி விபுலானந்தன்
செப்பிய மறை மொழியாம் - என் தங்கையே
செப்பிய மறை மொழியாம்! - உள்

**சரணங்கள்**

கூப்பிய கைகளடி கும்பிடும் தேவனுக்கு
சூட்டிடும் புஷ்பங்களடி - என் தங்கையே
சூட்டிடும் புஷ்பங்களடி!

காப்பியக் காதலனார் யாழிசைப் பாவலனார்
காட்டிய மார்க்க மிதடி - என் தங்கையே
காட்டிய மார்க்க மிதடி! - உள்

நாட்ட விழிகளடி நம்புங் கடவுளுக்கு
நாமிடும் பூக்களாமடி - என் தங்கையே
நாமிடும் பூக்களாமடி!

பாட்டிலும் பக்தி நெறி ஊட்டிய பாமுனிவன்
சாற்றிய தத்துவமடி - என் தங்கையே
சாற்றிய தத்துவமடி! - உள்



# அடிகளாரின் படிகளானோர்

முன்னிலங்கை நாட்டிலே
மூன்றுதமிழ் வாழவே
மன்னுமெங்கள் சைவமாம்
மாமறையும் வாழவே
தென்னிலங்கை மண்முதல்
தேசமெங்கும் நாங்களே
பன்னலங்கள் ஆண்டதோர்
பண்டை நிலை நீடவே
பணிபுரிந்தான் - வழிநடந்தான்
தவமிருந்தான் - விபுலனன்றோ! - முன்

நல்லைநகர் நாயகன்
ஆறுமுக நாவலன்
சொல்லுதமிழ்த் தூயவன்
தொண்டு செய்த காவலன்
வெல்லவரும் வெள்ளையோர்
வீரமனம் வென்றவன்
தில்லையரன் நாமமே
செப்புமொரு தீட்சதன்
அருள்மொழிதான் - திருவளமாய்
மருவி நின்ருன் - விபுலனன்றோ! முன்

பாலர்தமிழ்ப் பாட்டினாற்
பாடம் சொன்ன பாட்டனார்
சோமசுந்த ரக்கவி
தொல்நவாலி ஊரனார்
சீலரன்பர் குமார-
சுவாமிப் புலவனார்
கோலநெற்றி நீறுடன்
தோணும்சைவ நாயனார்
தமை நினைந்தான் - தவம் முனைந்தான்!
நமைநினைந்தான் - விபுலனன்றோ! முன்

# மணி மண்டபம்

**பல்லவி**

சொல்லடி சொக்காயி!சோதிமணி மண்டபம்
கல்லடி உப்போடை கண்டகதை சொல்லடி - சொல்

**அனுபல்லவி**

சொல்லடி காரேறும் தூயதமிழ் ஊரிலே
அல்லடி நீக்கி அருள் ஆனந்தனார் தோன்றினார் - சொல்

**சரணங்கள்**

பெற்றாரும் உற்றாரும் பேரறிஞர் யாவரும்
கற்றாரும் எல்லோரும் காணமயில் வாகனன்
முற்றிலும் சிவஞானம் முறையோடு நாடினான்
வற்றிடா வளமாகி வளர்ந்ததே ஞானமே! - சொல்

பருவம் நிலைமாறிப் படியேறும் பாங்கிலே!
அருளும் தவநிலையும் அறவாழ்வுந் தாங்கியே!
உருவம் துறமாகி உலகெங்கும் ஓங்கியே!
பெருகும் புகழெய்தான் பேரின்பன் பாங்கியே! - சொல்

சைவமே தமிழாகும் தமிழுயிராய் ஆகும்!
தெய்வமே துணையாகும் செல்வங் கல்வி ஆகும்!
எய்திடும் சுவையின்பம் இசையின்பம் ஆகும்!
உய்யுமே வாழ்வென்றான் எங்கள் திரு நாயகன்! - சொல்

ஆனந்த ஞானியவன் அடிபணியும் மண்டபம்!
ஆண்டாண்டு தோறும்புகழ் ஆங்கொலிக்கும் மண்டபம்!
வானந்தனில் அமரர் மனங்கவரும் மண்டபம்!
மட்டுநகர் வரலாற்றை வாழ்த்தும் மணி மண்டபம்! - சொல்



# நூற்றாண்டு வாழ்த்து

வாழ்க, நிதம் வாழ்க! - வாழ்க
வாழ்க, நிதம் வாழ்க!
யாழொலி மாமுனியார் - புகழை
நாட்டிய நூற்றாண்டே! - வாழ்க

ஓடிய நூற்றாண்டே - உலகம்
பாடிடும் அரு ளாண்டே!
கோடி விரைந்தாலும் - காலம்
கொண்டாடும் உனை ஆண்டே! - வாழ்க

மட்டு நகர் வானில் - வாழும்
வண்டமிழ்த் தாரகையாம்!
வட்டநிலம் மகிழும் - விபுலன்
மாண்பு சொல்லும் ஆண்டே! - வாழ்க

திருமயில் வாகனனார் - சுவாமி
திருவிபு லானந்தனார்
அருள்முனி ஆன கதை - கூறும்
அற்புத நூற்றாண்டே! - வாழ்க

வாழிய தமிழ் வாழ்க! - சைவம்
மாமறையாய் வாழ்க!
வாழிய நூற்றாண்டே! - எங்கள்
மாமுனி நூற்றாண்டே! - வாழ்க

# எல்லோருக்கும் எமது நன்றி

தவத்திரு விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டுப் பாமலர் நூல் வெளியீட்டு நிர்வாகப் பொறுப்பினை அன்புடன் ஏற்று எமக்கு எல்லா வகைகளிலும் உதவி புரிந்த திரு.இ.கந்தசாமி (சட்டத்தரணி,குருக்கள்மடம் கண்ணன் கோவில் பரிபாலனசபைத் தலைவர்) அவர்களுக்கும், திரு. ஞா.சாமித்தம்பி(பிரதேச மருந்தாளர், சுகாதாரப் பகுதி, மட்டக்களப்பு) அவர்களுக்கும், நூலுக்கு ஆசிச் செய்திகள் தந்துதவிய மட்டக்களப்பு கல்லடி-உப்போடை இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவனானந்த அவர்களுக்கும், விபுலானந்த அடிகள் இசை நடனக் கல்லூரி அதிபர் திருமதி.வி.தட்சணாமூர்த்தி அவர்களுக்கும், இந் நூலினை அழகாக அச்சிட்டுத்தந்துதவிய மட்டக்களப்பு புனித செபத்தியார் அச்சக உரிமையாளர் திரு.அ.சிவதாசன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

பண்டைத்தமிழ்க் கிராமிய அரங்கம்
Ancient Tamil Folk Theatre
London,United Kingdom
07-12-1992





சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதி



மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமம்



# கவிஞர் ஞானமணியம்

**பிறந்தது:** மட்டக்களப்பு திருப்பழுகாமம் ஞானமுத்து மாதம்மை தம்பதியரின் ஐந்தாவது புதல்வனாக, ''சுப்பிரமணியம்''- எனப்பெயரிட்டு.

**பயின்றது:** திருப்பழுகாமம் விபுலாநந்தவித்தியாலயம், கோட்டமுனை இந்துக்கல்லூரி.
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலாந்தமிழறிஞர்களிடமும், கலைஞர்-தந்தை த.டீ.வி.ஞானமுத்து வழிநின்று பயின்று சிறந்தவர்.

**புகுந்தது:** குருக்கள் மடம் இளையதம்பி பரஞ்சோதி ஆசிரியையின் துணைவனாக.

**சிறந்தது:** ஆசிரியராக, காகித ஆலைக்கூட்டுத்தாபன ஊழியராக, வானொலிக் கலைஞராக, ஈழ-தமிழக பத்திரிகை எழுத்தாளராக, கவியோகி சுத்தாநந்த பாரதியார் முதலாம்ஞானியர் ஆசிபெற்ற இந்து சமயக் கவிஞராக, மாநில தேசிய-சமூகத் தொண்டராக கடல்கடந்து பண்டைத் தமிழ்க்கலை பரப்பாளராக கமழ்பவர்.

**வெளியிட்டது:** ''வாணி வழிபாடு''
''இலண்டன் உயர்வாசற் குன்றம் முருகனின் 108ப் போற்றிகள்''
''பேர்ளின் வேலனின் 108ப் போற்றிகள்''

**தரித்தது:** பண்டைத்தமிழ்க்கலை அரங்கம் (ANCIENT TAMIL FOLK THEATRE)இலண்டன் மாநகர்.

சட்டத்தரணி இ.கந்தசாமி
குருக்கள்மடம்

**Offset by : TRISTAR, DEHIWALA.**